DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **துரைப்பாண்டி** |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | மரவியாபாரி |
| Age | : | 43/2025 |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2 மற்றும் 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 2 மற்றும் 3-ம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.03.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆலம்பக்கோட்டையில் வசித்து மரவியாபாரம் தொழில் செய்துவருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரும் எனது வீட்டின் பின்புறம் வசித்து வருகிறார்கள். சாட்சி இந்துமதி எனது மனைவி. புஷ்பம் என்பவர் எனது அம்மா ஆவார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தொழில் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 13.08.2021ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் எனது விட்டில் இருந்தேன். என்னுடன் எனது மனைவியும் குழந்தைகளும் வீட்டில் இருந்தனர். அப்போது எதிரி அருவாளுடன் எனது வீட்டிற்கு வந்தார். எதிரி எனது வீட்டு வாசலில் வந்து என்னை பார்த்து என்னை பற்றி ஊரில் இல்லாததததும் பொல்லாததும் ஏன் பேசுகிறாய் என கேட்டு ஒக்கால ஓலி என்று தகாதத வார்த்தைகளால் என்னை திட்டினார். எதிரி என்னை திட்டியதால் நானும் பதிலுக்கு பேசினேன். எதிரியிடம் பேசும் சத்தம் கேட்டு எனது மனைவியும் வந்துவிட்டார். எனது மனைவியும் எதிரியிடம் ஏன் இப்படி தகாத வார்த்தைகளால் பேசுகிறிர்கள் என கேட்டார். எதிரி என்னை மனைவியிடம் அப்படி தான் பேசுவேன்

என்று கூறி அவர் கையில் வைத்திருந்த அருவாளல் எனது மனைவியின் வலது முழங்கை அருகே வெட்டிவிட்டார். அதை நான் தட்டி கேட்டபோது எதிரி அதே அருவாளல் என்னை வலது கை தோள்பட்டையில் வெட்டி விட்டார். எதிரியின் கடைசி மகள் 2ம் எதிரி அஸ்வினி என்பவர் அதே அருவாளல் என்னை இடது தோள்பட்டையின் பின்புறம் வெட்டினார். எதிரியின் 2 வது மகள் 3 வது எதிரியான தாரணி என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் எனது இடுப்பில் அடித்தார் அதில் எனக்கு உள்காயம் ஏற்பட்டது. பின் பக்கத்தில் இருந்த பஞ்சவர்ணம் , மீனாள் , அமுதா , கிருஸ்ணன் , மணிமேகலை ஆகியோர் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். அதன் பிறகு எதிரி என்னை இன்னைக்கு தப்பிவிட்டாய் என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என்கையில் தான் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக நான் எனது மனைவியும் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். மறு நாள் 14.08.2021ம் தேதி நான் சிகிச்சையில் இருந்தபோது திருவேகம்பத்தூர் காவல்நிலைய போலிசார் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம் பெற்றார். புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார். புகார் வாக்குமூலத்தில் உள்ள துரை பாண்டி என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 1** ஆகும். அந்த புகார் வாக்குமூலத்தில் சிகிச்சையில் எனக்கு உதவியாக இருந்த எனது அம்மா புஸ்பம் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் தான் வழக்கு சம்பவத்தின்போது 1 மற்றும் 2 வது எதிரி என்னை தாக்க பயன்படுத்தியதாகும் . அந்த இரும்பு பிடி கொண்ட அருவாள் **அ.சா.பொ.1** ஆகும். மருத்துவமனையில் நான் சுமார் ஒன்றரை மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** : குறுக்குவிசாரணைக்கு அவகாசம் கேட்கபட்டது.

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.04 14:36:30 +0000

Chief Judicial Magistrate

Sivagangai

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **இந்துமதி** |
| Husban Name | : | துரைப்பாண்டி |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 31.∴2025 |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2 மற்றும் 3-ம் எதிரி ஆஜர் இல்லை. 2 மற்றும் 3-ம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.03.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஆலம்பக்கோட்டையில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 துரைப்பாண்டி . எனது கணவர் . வழக்கின் ஆஜர் எதிரி மற்றும் 2, 3 ம் எதிரிகளை எனக்கு தெரியும். எனது வீட்டின் பின்புறம் எதிரிகள் வசித்து வருகின்றனர். எனது கணவர் மர வியாபாரம்செய்து வந்தார். அந்த மரவியாபாரத்தில் எதிரி அவ்வப்போது கிராமத்தலையாரியிடம்எனது கணவர் மீது அடிக்கடி புகார் கூறுவார். அதனால் என் கணவருக்கும் முதல் எதிரிக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது. 13.08.2021ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் எனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் வீட்டில் இருந்தேன். அப்போது எதிரி எங்கள் வீட்டின் முன்பு கையில் அருவாளுடன் வந்து என் கணவரை அசிங்கமான வார்த்தைகாளல் திட்டினார். நான் 1ம் எதிரியிடம் என் கணவரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டாதீர்கள் என்றும் அங்கிருந்து போகும் படி சொன்னேன். அதற்கு 1ம் எதிரி

என்னிடம் அப்படித்தான் பேசுவேன் என்று கூறி எனது வலது முழங்கையில் வெட்டினார். அதில் எனக்கு ரத்த காயம் ஏற்பட்டது. ( சாட்சி தனது வலது கையில் உள்ள வெட்டப்பட்ட காயத்தின் தழும்பை நீதிமன்றத்தில் காட்டினார். ) பின்னர் 1வது எதிரியின் மகளான 2 வது எதிரி அஸ்வினி என்பவர் எனது கணவர் இடது பக்கதோள்பட்டையில் வெட்டினார். தாரணி என்பவர் கட்டையால் எனது கணவரை இடுப்பில் அடித்தார். எனது கணவருக்கும் சம்பவத்தில் ரத்த காயம் ஏற்பட்டது. பின்பு எனது வீட்டில் அருகில் வசிக்கும் மீனாள், பஞ்சவர்ணம், கிருஷ்ணன் , கருப்பையா , அமுதா, மணிமேகலை ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டனர். அதன் பிறகு 1ம் எதிரி எங்களை பார்த்து வெட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றுவிட்டார். என்னையும் எனது கணவரையும்வெட்ட பயன்படுத்திய அருவாளை 1ம் எதிரி எடுத்து சென்றுவிட்டார். பின்னர் 108 ஆம்புலன்ஸ்" மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எலும்பு முறிவு ஏற்பட்டதால் பிளேட்டு பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்க பட்டது. நான் உள்நோயாளியாக சுமார் ஒன்றரை மாதம் மருத்துவமனையில் சிசிக்சை எடுத்துகொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சா.பொ.1 என்னையும் எனது கணவரையும் தாக்க பயன் படுத்தியதாகும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

குறுக்குவிசாரணைக்கு அவகாசம் கேட்கபட்டது.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.04 14:36:18 +0000

Chief Judicial Magistrate

Sivagangai